டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.06.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 33 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 295 - Madurai | Online Edition

# இந்தியாவின் உணவு உற்பத்தி 376 மில்லியன் டன்களை எட்டியுள்ளது

## மத்திய வேளாண் அமைச்சர் தகவல்

புது தில்லி, ஜூன் 12

இந்தியாவின் உணவு உற்பத்தி 376 மில்லியன் டன்களை எட்டியுள்ளதாகவும் வேளாண் துறையின் வளர்ச்சி 4.5 சதவீதமாக பதிவாகியுள்ளதாகவும் மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் நடைபெற்று வரும் பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் மாநாட்டில், தொடக்க நாள் அமர்வில் உரையாற்றிய அமைச்சர், சிறு விவசாயிகளின் மேம்பாட்டில் அரசு கவனம் செலுத்தி வருவதாக கூறினார். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் சர்வதேச வேளாண் ஒத்துழைப்பிற்கான கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கு இந்தியா உயர் முன்னுரிமை அளித்து வருவதாகக் கூறினார். உலகம் முழுவதும் ஒரே குடும்பமாக கருதும் வசுதைவ குடும்பகம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் இந்தியாவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். உலகளவில் அமைதி மற்றும் ஒத்துழைப்புக்கான கொள்கைகளுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக போர் புரிவதற்கு மாறாக அமைதி ஒருங்கிணைப்பு போன்ற அம்சங்களில் உலக நாடுகள் தங்களது கவனத்தை செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இத்தகைய கொள்கைகள் எதிர்காலத்தில் வலுவான பயனுள்ள வேளாண் ஒத்துழைப்புக்கு அடித்தளமாக அமையும் என்று அவர் நம்பிக்கைத் தெரிவித்தார். சிறு, குறு, விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களைக் குறிப்பாக பருவநிலை மாற்றம் இயற்கை வளங்கள் மீதான அழுத்தம் அதிகரித்து வரும் வேளாண் இடுபொருள்களுக்கான செலவுகள் வேளாண் சந்தைகளில் நிலவும் நிச்சயமற்ற சூழல் போன்ற சவால்களை ஒன்றிணைந்து எதிர்கொள்வதற்கான தளமாக இந்த மாநாடு அமைந்துள்ளதாக சௌகான் கூறினார்.

# விதை பரிசோதனை நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ஆய்வு



பெரம்பலூர், ஜுன் 12

பெரம்பலூர் மாவட்ட விதை பரிசோதனை நிலையத்தில் மாவட்டஆட்சியர் ஷரண்யா அறி, 11.06.26 அன்று ஆய்வு மேற் கொண்டார். அப்போது விதை பரி சோதனை நிலையத்தில் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் செயல்பாடுகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை பார்வையிட்டார்.

இவ்விதை பரிசோதனை நிலையத்தில் மாவட்டத்தின் முக்கிய பயிர்களான மக்கச்சோளம், பருத்தி, நெல், வெங்காயம், பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்கள் மற்றும் காய்கறி பயிர்களில் ஆய்வு மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தார். மேலும் 2025-2026 ஆம் ஆண்டுஇலக்கு 2667 விதை மாதிரிகளுக்கு இதுவரை 347, விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்து சாதனை அடையப்பட்டுள்ளது. அதில் 17 விதை மாதிரிகள் தரமற்றவை என கண்டறியப்பட்டுள்ளதையும் ஆய்வு செய்தார்.



விதையின் தரத்தை அறிந்திட முளைப்புத்திறன், ஈரப்பதம், புறத்தூய்மை மற்றும் பிறரககலவன் ஆகியவை பரி சோதனைகள் முறையாக செய்யப்படுகிறதா எனவும் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் விதைகள் கிடைத்திட பகுப்பாய்வு முடிவுகள் இணையதளத்தின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு உடனுக்குடன் வழங்கப்படுகிறதா எனவும் ஆய்வு செய்தார்.

விவசாயிகளுக்கு தரமான விதைகள் கிடைத்திடவும் பகுப் பாய்வு முடிவுகளை உரிய காலத்தில் வழங்கிடவும் அறிவுறுத் தினார். ஆய்வின் போது திருச்சி விதை பரிசோதனை அலுவலர் ஏ.லீமாரோஸ், வேளாண்மை அலுவலர் ரா.அம்பிகா மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், ஜீன் 12

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அடுமனைப் பொருட்கள் தயாரிக்கும் இரண்டு நாட்கள் பயிற்சி வருகிற 16.06.26 மற்றும் 17.06.26 தேதிகளில் நடைபெறுகிறது.

அடுமனை உணவுப் பொருட்களுக்கு தற்பொழுது மக்கள் மத்தியில், அதிக வரவேற்பு உள்ளது. அதற்கான முக்கியக் காரணம் விரும்பத்தக்க வகையிலும் பற்சுவைகளிலும் மிக எளிதில் இவை கிடைப்பதேயாகும். இந்த பயிற்சி சிறுதொழில் முனைவோருக்கு தங்களது வருமானத்தைப் பெருக்க பெரிதும் உதவியாக இருக்கும். ஆகவே, பயிற்சியின் போது கீழ்க்காணும் அடுமனைப் பொருட்கள் எளிய முறையில் தயாரிப்பதற்கான

தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவையாவன :

- ரொட்டி வகைகள்
- கேக் மற்றும் பிஸ்கட்
- பப்ஸ்

இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண்.7, மருதமலை சாலை), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. அலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

KALYAN JEWELLERS

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# ஸ்டீவியா இலைச்சாற்றிலிருந்து குறைந்த கலோரி கொண்ட கேக் தயாரித்தல்

ஸ்டீவியா (Stevia rebaudiana Bertoni) என்பது சூரியகாந்தி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பல்லாண்டு கால மூலிகையான ஸ்டீவியாரெபாடியானா தாவரத்தின் இலைகளிலிருந்து பெறப் படும் ஒரு இயற்கையான, கலோரி இல்லாத இனிப்பூட்டியாகும்.



ஸ்டீவியா பல நூற்றாண்டுகளாக ஒரு இயற்கை இனிப்பூட்டியாகவும் பாரம்பரிய மருத்துவத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்டீவியா இலைகள் உலகின் பல்வேறு பகுதிகளில் நீரிழிவு நோய்க்கு சிகிச்சையளிக்கப் பொதுவாகப் பயன் படுத்தப்படுகின்றன. பல நாடுகளில், ஸ்டீவியா உணவுகள், பானங்கள் மற்றும் மருந்துகளில் சர்க்கரைக்கு மாற்றாகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த இனிப் புக்கு காரணம் அதில் உள்ள ஸ்டீவியோல் கிளைகோசைடுகள் ஆகும், இது சுக்ரோஸைவிட 100-300 மடங்கு அதிக இனிப்புத் தன்மையைக் கொண்டுள்ளது.

பேக்கரி என்பது ஒரு பாரம்பரிய தயாரிப்பு மற்றும் உணவு பதப்படுத்தும் துறையில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. பேக்கரி பொருட்கள் அனைத்து தரப்பு மக்களிடையேயும் ஒரு பொதுவான நுகர்வுப் பொருளாக மாறியுள்ளன. இந்தியாவில் பேக்கரி பிரிவை ரொட்டி, பிஸ்கட் மற்றும் கேக்குகள் என மூன்று பரந்த பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

கேக்குகள் என்பவை, கோதுமை மாவு அடிப்படையிலான மாவுக் கலவையை அடர்த்தியான வடிவத்தில் சுடுவதன் மூலம் தயாரிக்கப்படும், இனிப்பான, ஓரளவு ஈரப்பதமான உணவுப் பொருளாகும்.

### தேவையான பொருட்கள்

- கோதுமை மாவு - 500 கிராம்
- ஸ்டீவியா இலைச்சாறு - 25 மிலி
- உப்பு சேர்க்காத வெண்ணெய் - 200 கிராம்
- முட்டைகள் - 10 எண்ணிக்கை

● பேக்கிங் பவுடர் – 10 கிராம்
● பேக்கிங் சோடா – 10 கிராம்
● வெண்ணிலா எக்ஸ்ட்ராக்ட் – 10 மிலி

**ஸ்டீவியா இலைச்சாறு தயாரித்தல்**

ஸ்டீவியா இலைகள் பன்னிரண்டு மணி நேரம் சுடு நீரில் ஊறவைக்கப்பட்டு, அதனை வடிகட்டிப் பிரித்தெடுக்க வேண்டும். பின்னர், அந்தத் திரவத்தை சூடுபடுத்தி அடர்த்தியான திரவத்தைப் பெற வேண்டும்.



**கேக் தயாரித்தல்**

● முதலில் ஓவனை 180°C வெப்ப நிலையில் 10–15 நிமிடங்கள் முன்கூட்டியே சூடாக்கவும். அடுத்து, கோதுமை மாவை பேக்கிங் பவுடர் மற்றும் பேக்கிங் சோடாவுடன் சலிக்கவும்.

● முட்டையின் மஞ்சள் கரு மற்றும் வெள்ளைக்கருவைப் பிரிக்கவும். முட்டையின் மஞ்சள் கருவை அடித்து, அதனுடன் இளகிய வெண்ணெயைச் சேர்க்கவும். அது ஒரு மென்மையான பசை போல ஆகும் வரை அடிக்கவும். அது மென்மையாக ஆனதும், ஸ்டீவியா இலைச்சாறு மற்றும் வெண்ணிலா எசென்ஸ் சேர்த்து மீண்டும் அடிக்கவும். சலித்த மாவை இரண்டு பகுதிகளாக சேர்க்கவும், ஒவ்வொரு முறை சேர்த்த பிறகும் அடிக்கவும்.

● முட்டையின் வெள்ளைக் கருவை மென்மையான நுரை உருவாகும் வரை அடிக்கவும், அந்த நுரைத்த வெள்ளைக் கருவை மாவுடன் இரண்டு மூன்று பகுதிகளாகப் பிரித்து மெதுவாக சேர்க்கவும்.



● பேக்கிங் பாத்திரத்தில் நெய் தடவி, பேக்கிங் பேப்பரை விரிக்கவும். தயாரிக்கப்பட்ட அச்சுகளில் மாவை ஊற்றவும். முன் சூடாக்கப்பட்ட பேக்கிங் அடுப்பில் 40–45 நிமிடங்கள் பேக் செய்யவும்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

# விவசாய நிலத்தை பாதுகாப்போம் இயக்க பயிற்சி நடைபெற்றது




மதுரை, ஜூன் 12

மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி மற்றும் தமிழக தோட்டக் கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இணைந்து 10.06.26 அன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கச்சைகட்டி வருவாய் கிராமத்தை சேர்ந்த குட்லாம்பட்டியில் 'கேத் பச்சாவோ அபியான்' (விவசாய நிலத்தை பாதுகாப்போம் இயக்கம்) நடைபெற்றது.

துணை தோட்டக்கலை அலுவலர் முத்துக்குமரன் அனைவரையும் வரவேற்று பேசினார். அதை தொடர்ந்து தோட்டக்கலை உதவி இயக்குநர் இயக்குனர் கார்த்திகை பிரியா, தமது சிறப்புரையில் இயற்கை விவசாயம் மற்றும் சமசீர் உர பயன்பாடு குறித்து உரையாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் அமுதா, பூச்சிக் கொல்லிகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தும் முறைகள், மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும் இம்மையத்தை சேர்ந்த ராஜேஸ்வரி, உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் அபின், தொழில் நுட்ப அலுவலர், உயிரியல் நோய் கட்டுப்பாட்டு காரணிகளை கொண்டு விதை நேர்த்தி செய்வதை குறித்து செயல் முறை விளக்கம் அளித்தார்.

நிகழ்ச்சியின் நிறைவில் உதவி தோட்டக்கலை அலுவலர் சிவகுமார் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் 54 மா விவசாயிகள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# இயற்கை உர உபயோகத்தை அதிகரித்தல்

# வேளாண்மை இணை இயக்குநரின் ஆலோசனை



புதுக்கோட்டை, ஜூலை 12

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு இயற்கை உர உபயோகத்தை அதிகரித்து மண் வளத்தை பாதுகாக்க வேண்டி புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி, ஆலோசனை தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பாவது.

● இயற்கை உரம் என்பது பல்வகைப்பட்டதாகும். அவையாவன மக்கிய சாண உரம், கம்போஸ்ட் உரம், ஆடு மாடு மற்றும் கோழிகளின் உரம், மற்ற மிருகங்களின் உரம், பசுந்தாள் உரம், பசுந்தழை உரம், புண்ணாக்கு உரம், கரும்பு ஆலைக்கழிவு உரம், தென்னை நார் கழிவு உரம், மனிதக் கழிவு உரம் ஆகியவையாகும்.



● இது போன்று இயற்கையாக உள்ள அனைத்து கழிவுகளால் ஆக்கப்பட்ட உரங்கள் அனைத்தும் இயற்கை உரம் என்று அழைக்கப்படுகிறது.

● இந்த இயற்கை உரத்தால் மண்ணுக்கு பல நன்மைகள் கிடைக்கிறது. இயற்கை உரம் அனைத்து ஊட்டச்சத்துக்களையும் கொண்டுள்ளது. ஊட்டச்சத்துக்களின் அளவு குறைந்ததாக இருப் பினும், அவை பயிர்கள் எளிதாக எடுத்துக்கொள்ளும் வகையில் உள்ளது.

● தழை, மணி, சாம்பல் சத்துக்களைத் தவிர்த்து மற்ற சத்துக்களும் இதில் உள்ளன. எனவே இதை நிலத்தில் இடுவதால் பயிர்களில் ஊட்டச்சத்துக்களின் தேவையை ஓரளவு பூர்த்தி செய்கிறது.

● மேலும், இந்த இயற்கை உரங்கள் மக்கி பயிர்கள் எடுத்துக் கொண்டது போக, மீதியுள்ள பொருளைத்தான் நாம் "மக்கு" என்று அழைக்கின்றோம். ஆங்கிலத்தில் இதை (ஹூமஸ்) என்று கூறுகிறோம். இந்த மக்குவின் அளவு நிலத்தில் கூடக்கூட நிலத்தின் வளம் அதிகரிக்கிறது. இந்த மக்கு ஊட்டச்சத்துக்களை பிடித்து வைத்துக்கொள்ளும். நீரையும் தேவையான அளவில் வைத்துக் கொள்ளும். எனவே இயற்கை எரு அதிகமாக இடும் நிலத்தில் மக்குவின் அளவும் அதிகரிக்கிறது. இதன் காரணமாக மண்ணின் வளம் கூடுகிறது.



● இயற்கை எரு மண்ணின் அமைப்பை மாற்றி நிலத்தை நல்ல நிலமாக மாற்றுகிறது. மண்ணை பொல பொலப்பாக்கி உரங்கள் வீணாகாமல் தடுத்து பயிர்கள் எளிதில் எடுக்க வழிசெய்கிறது.

● இயற்கை எரு நீரை பிடித்து வைத்திருந்து பயிர்களின் தேவைக்கு உதவுகிறது. அதிக நீரை வடிக்கவும் உதவுகிறது.

● மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள், பாக்டீரியா, காளான், ஆக்டினோபமைசிட் ஆகியவைகளின் உணவுத் தேவையை பூர்த்தி செய்து அவைகள் பல்கி பெருக உதவி செய்கிறது.

● இந்த நுண்ணுயிர்கள் அதிகமாக மண்ணில் இருந்தால்தான் மண்ணிலிருந்து ஊட்டச்சத்துகளை பயிர்கள் எடுக்க உதவுகின்றன. கிட்டாத நிலையில் உள்ள சத்துக்களை கிட்டும் நிலைக்கு மாற்றி அமைக்கவும் உதவுகின்றன.



● மண்ணில் உஷ்ணத்தை நிலைப்படுத்தி பயிரின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

● காற்றோட்டத்தை அதிகரித்து வேர் வளர்ச்சியை கூட்டுகிறது.

● இயற்கை எரு மக்கும் போது உண்டாகும், அமிலங்கள் நிலத்தில் உள்ள ஊட்டச்சத்துக்களை பயிர்களுக்கு கிட்டும் வண்ணம் எடுத்துக் கொடுக்கிறது.

● பசுந்தாள், பசுந்தழை. உரங்கள், மணிச்சத்தை கிட்டும் நிலைக்கு கொணர்ந்து பயிர்கள் எளிதில் எடுக்க உதவுகின்றன.

● கரும்பு ஆலைக் கழிவு மண்ணில் உள்ள களரை நீக்க உதவுகிறது, மண்ணிலுள்ள நுண்ணுயிர்களின் அளவை பெருக்குகிறது.



● வேம்பு மற்றும் புங்கம் புண்ணாக்கு உரங்கள் மண்ணில் உள்ள பூச்சிகளை கட்டுப்படுத்துகிறது.

இது போன்ற இயற்கை உரங்கள் மண்ணிற்கு நன்மைகள் செய்து மண்ணின் வளத்தை பாதுகாக்கிறது.

எனவே விவசாயிகள் அனைவரும் இயற்கை உரங்களை பயன்படுத்தி மண் வளத்தை பாதுகாக்கலாம் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

# இராமநாதபுரம் வட்டாரத்தில் நாரணமங்களம் கிராமத்தில் ஊட்டமேற்றிய தொழுஉரம் விவசாயிகள் பயிற்சி

இராமநாதபுரம், ஜூலை 12

இராமநாதபுரம் வட்டாரம், நாரணமங்களம் கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஊட்டமேற்றிய தொழுஉரம் விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் வரவேற்புரையாற்றிய வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) உ.அம்பேத்குமார், அனைவரையும் வரவேற்று வேளாண்மைதுறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான மானிய விபரங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிய வேளாண்மை இணை இயக்குநர் பாஸ்கரமணியன், உயிர் உரங்களின் பயன்பாடு, மண்பரிசோதனை செய்வதன் முக்கியத்துவம் மற்றும் ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரித்தல் பற்றி விவசாயிகளிடம் கூறினார்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை துணை இயக்குநர் (மா.தி) அமர்லால், ஒருங்கிணைந்த உரம் மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை மூலம் இரசாயன உரங்களின் பயன்பாட்டினை குறைக்க வேண்டும் என்றும் விவசாயிகளிடம் எடுத்துக்கூறினார் மற்றும் ஊட்டமேற்றிய தொழுஉரம் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை துணை இயக்குநர் (ம.தி) பொ.இராஜா, வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். மேலும் விவசாயிகள் அனைவரும் இரசாயன உரத்தினை குறைத்து உயிர் உரங்கள் மற்றும் பசுந்தாள் உரங்களை பயன்படுத்தி மண்வளத்தை பாதுகாக்குமாறு விவசாயிகளிடம் எடுத்துக் கூறினார்.


இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜன், ஊட்டமேற்றிய தொழுஉரம் தயாரிப்பு முறையே செயல்விளக்கம் மூலம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் அவர் இரசாயன உரத்தினை குறித்து உயிர் உரங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்தும் மண்பரிசோதனை

செய்து அதற்கேற்றவாறு உரங்களை பயன்படுத்த வேண்டும் என்று விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

இராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர் இரவிச் சந்திரன், வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடுகள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் ப.கோசலாதேவி நன்றியுரை கூறினார். இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஜெயக்கொடி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் இராஜேஸ்குமார் மற்றும் அபினாஸ்ரீ ஆகியோர் செய்திருந்தனர்.




# அமில நிலத்தை சீர்திருத்தம் செய்வது எப்படி?




அமில மண் என்பது பி.எச் மதிப்பு 5.5க்கும் 7க்கும் குறைவாக உள்ள மண் வகையாகும். இது எதனால் உண்டாகிறது தெரியுமா?

அதிக மழை பொழிவு, இலைதழைகள் மக்குதல், செயற்கை உரங்களின் பயன்பாடு காரணமாகவும் இந்த அமில நிலம் (ACIDIC SOIL) உருவாகிறது. தீவிர அமிலத்தன்மை, (பி.எச் 5.5) தாவரங் களுங்கு தேவையான ஊட்டச்சத்துகளை குறைத்து அலுமினியம் நச்சுத்தன்மை ஏற்படுத்தி பயிர் வளர்ச்சியை பாதிக்கும்.

மழைப்பொழிவு அதிகமான பகுதிகளில் (நீலகிரி, கொடைக் கானல்) மண்ணில் உள்ள கால்சியம், மெக்னிசியம் போன்ற முக்கிய சத்துகள் (தாதுக்கள்) அடித்து செல்லப்படுவதால் அமில தன்மை உருவாக்கப்படுகிறது. பாஸ்பரஸ் போன்ற மணி சத்துகளை தாவரங்கள் எளிதில் உறிஞ்சிட முடிய வில்லை. இதனால் இலைகள் பச்சையம் இழந்து மஞ்சள் நிறமாக தோன்றும்.

**அமில நிலத்தை விளைகின்ற நல்ல நிலமாக மாற்றுவது எப்படி?**

மண்ணின் தரத்தை மேம்படுத்தவும் நல்ல மகசூல் பெற சுண்ணாம்பு, சாம்பல் தூள் டோலமைட் ஆகியவற்றை இடலாம்.



## டோலமைட் (DOLOMITE POWDER)

இதில் கால்சியம் கார்பனேட் 54.5% யாகவும. 45.5% மெக்னிசியம் கார்பனேட் கொண்ட வேதிப் பொருளாகும். இதை நிலத்தில் இடும் போது கார்பனேட் அயனிகள் நிலத்தில் உள்ள ஹைட்ரஜன் அயனிகளுடன் வினைபுரிந்து மண்ணின் அமில தன்மையை குறைக்கிறது. அமில மண்ணில் டோலமைட் இடுவதன் மூலமாக மண்ணின் (பி.எச்) 6.5-7 வரை உயர்த்தி நடுநிலைமையாக்கி (NEUTRAL SOIL) மாற்றி தாவரங்களுக்கு தேவையான கால்சியம், மெக்னிசியம் போன்ற சத்துகளை வழங்குகிறது. அதுமட்டுமல்ல மண்ணின் தழைசத்து செயல் பாட்டை அதிகரித்து, வேர் வளர்ச்சியை ஊக்குவித்து தரமான மற்றும் கூடுதலான மகசூல் பெற முடிகிறது.

## எவ்வளவு இடவேண்டும்?

மண் பரிசோதனையின் பரிந்துரைக்கேற்ப இடலாம். ஏக் கருக்கு 400 கிலோ வரை இடலாம். பயிர் விதைப்புக்கு 10 நாட்களுக்கு முன்னதாக மழை இல்லாத தருணத்தில் இட வேண்டும். 10 நாட்களுக்கு பிறகு உழவு செய்து மண்ணுடன் கலக்க வேண்டும். ஒரு சில மாவட்டங்களில் சமவெளி பகுதி களில் கூட அமிலத்தன்மை உடைய நிலங்களை பார்க்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# மானிய விலையில் நுண்ணீர் பாசன கருவிகள்

தஞ்சாவூர், ஜூலை 12

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு மானிய விலையில் நுண்ணீர் பாசனம் பெற வேளாண்மை உதவி இயக்குநர் அப்சரா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டள்ளதாவது, நாளுக்கு நாள் தண்ணீரின் தேவை அதிகரித்து வரும் நிலையில் தண்ணீர் பற்றாக்குறையும் அதிகரிப்பதால் தண்ணீரின் மதிப்பு பல மடங்கு உயரும். ஆகையால் தண்ணீரை அளந்து சிக்கனமாக பயன் படுத்த மிகவும் பயன்படுபவை நுண்ணீர் பாசன கருவிகளாகும். நுண்ணீர் பாசனத்தில் சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் மற்றும் மழைத்தூவான் என்று மூன்று வகை உள்ளன. அதன்படி இந்த வருடம் 2026-27 ஆம் ஆண்டிற்கு நுண்ணீர் பாசன திட்டம் செயல்படுத்த பட்டுக்கோட்டை வட்டாரத்திற்கு 31 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி நுண்ணீர் பாசன திட்டத்தில் சிறு, குறு விவசாயிகளுக்கு 75 சதம் மற்றும் இதர விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் வழங்கப்பட உள்ளது.

தெளிப்பு நீர் மற்றும் மழைத் தூவான் கருவிகளுடன் வழங்கப்படும் நீர் கொண்டு செல்லும் குழாய்களின் அளவைப் பொறுத்து மானியத் தொகையுடன் விவசாயிகள் குறிப்பிட்ட அளவு பங்குத் தொகையினை கருவிகள் வழங்கும் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. விவசாயிகள் தங்கள் தேவைக்கேற்ப இரண்டு அங்குலம், இரண்டரை அங்குலம் மற்றும் மூன்று அங்குல குழாய்களைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கேற்றார் போல் பங்குத் தொகை மாறுபடும்.

மானியத்தில் நுண்ணீர் பாசன கருவிகள் தேவைப்படும் விவசாயிகள் மின்மோட்டார் வசதியுடன் கூடிய ஆழ்குழாய் கிணறு வசதியுடையவராக இருத்தல் வேண்டும். மானியம் தேவைப்படும் விவசாயிகள் சிறு, குறு விவசாய சான்று, ஆதார் அட்டை, கணிணி சிட்டா, அடங்கல், நில வரைபடம், விவசாயியின் புகைப்படம், குடும்ப அட்டை நகல் மற்றும் மின்கட்டண அட்டை நகல், பக்கத்து ஆழ்குழாய் கிணற்றில் இருந்து பெறுபவராக இருந்தால் ஒப்பந்த பத்திரம் ஆகிய ஆவணங்களுடன் தங்கள் பகுதி உதவி வேளாண் அலுவலர்களை அனுகி பயன் பெறலாம்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes com
Website : rithvikpipe com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தேனீ வளர்ப்பு குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, ஜூலை 12

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-2027 ஆம் ஆண்டு கொடிமங்கலம் கிராமத்தில் தேனீ வளர்ப்பு குறித்த உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி மற்றும் பாரதப் பிரதமரின் கௌரவ நிதி உதவி விழிப்புணர்வு முகாம் மற்றும் விளைநிலம் காப்போம் Khet Bachao Abhiyan கேத் பச்சோ அபியான் இயக்கத்தின் மூலம் சமச்சீரான உரப் பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்தும் விளக்கம் அளித்தார்.

குணசேகரன், வேளாண்மை அலுவலர் ஓய்வு, தேனீ வளர்ப்பு குறித்த செயல் விளக்கத்துடன் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் திருமுருகன், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் துறை சார்ந்த திட்டங்கள் மதிப்பு கூட்டுதல் மூலம் சிறு தானியங்கள் விற்பனை தொழில்நுட்பங்கள் வணிகம் செய்யும் முறைகள் குறித்தும் கூறினார். தோட்டக்கலை உதவி வேளாண்மை அலுவலர் ச-ாலினி துறை சார்ந்த திட்டங்கள் குறித்து கூறினார். கொடிமங்கலம் கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இம்மாவட்ட அளவிலான விவசாய பயிற்சி தொழில்நுட்ப மேலாளர் அழகர் மற்றும் மகாலட்சுமி ஏற்பாடு செய்திருந்தனர். இப்பயிற்சிக்கு ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில் நுட்ப மேலாளர் லதா நன்றியுரை வழங்கினார்.

# பயிர் பாதுகாப்பு மருந்து பயன்பாட்டினை பாதுகாப்பான முறையில் கையாளுதல்




விருதுநகர், ஜூலை 12

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டாரத்தில் தமிழ்நாடு அரசு வேளாண் துறை மூலம் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு மருந்து பயன்பாட்டினை பாதுகாப்பான முறையில் கையாளுதல் பயிற்சி வழங்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குநர் முத்தையா, தலைமை தாங்கி பயிற்சி துவக்கி வைத்தார். இந்த பயிற்சி வகுப்பில் அருப்புக்கோட்டை வேளாண் அறிவியல் நிலையம், பூச்சியியல் துறை பேராசிரியர் ஜடா கவிதா, சம்பத்குமார் உழவியல் பேராசிரியர், சாத்தூர் வேளாண் அலுவலர் இந்து, உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் அலுவலர், கா.அரிபுத்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

வேளாண் அறிவியல் நிலையம் பேராசிரியர் பூச்சிக்கொல்லி வகைகள், முக்கியத்துவம், மண் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தெளிப்பு தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளித்தனர். பேராசிரியர் சாகுபடி தொழில்நுட்பங்கள் பயிற்சி அளித்தார்.

உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் கா.அரிபுத்திரன், பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்தும்போது பின்பற்ற வேண்டிய முக்கிய வழிகாட்டுதல்கள், பூச்சிக் கொல்லி களைப் பாதுகாப்பாக பயன்படுத்துதல் குறித்து பயிற்சி அளித்தார்.

வேளாண்மை அலுவலர் கூறுகையில், பூச்சிக் கொல்லிகள் என்பவை பூச்சிகளைக் கட்டுப்படுத்த வடிவமைக்கப் பட்ட நச்சுப் பொருட்கள் ஆகும். எனவே, கடுமையான பாதிப்பு அபாயங் களைத் தணிப்பதற்கு, அவற்றைத் தயாரிக்கும் போதும், பயன்படுத்தும் போதும், அப்புறப்படுத்தும் போதும் முறையாகக் கையாள்வது மிகவும் இன்றியமையாதது.

பூச்சிக் கொல்லி மருந்து வாங்கியவுடன் அதன் மேல் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கரில் உள்ள வழிமுறைகளைக் கவனமாக படித்து தெரிந்து கொள்ள வேண்டும். வயல்வெளிகளில் மருந்து தெளிப்பவர்கள் பாதுகாப்பான உடைகளையும், ரப்பர் காலனி, கைகளுக்கு பாதுகாப்பு உறைகள் ஆகியவற்றை அணிந்து கொள்ள வேண்டும். மேலும் மருந்து தெளிக்கும் தெளிப்பான்களை பரிசோதனை செய்து அதில் கசிவு ஏதும் இருந்தால் அதை சரி செய்து கொள்ள வேண்டும். மேலும் மருந்து தெளிக்கும் இடத்திற்கு அருகில் சுத்தமான நீர், சோப்புக்கட்டி, துண்டு ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். இதனால் தற்செயலாக கை மற்றும் உடலில் மருந்து பட்டுவிட்டால் உடனடியாக சுத்தம் செய்து கொள்ளலாம்.




வயது முதிர்ந்தவர்களையோ, கர்ப்பிணி பெண்கள், குழந்தைகளை பராமரிக்கும் பெண்கள் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களை அருகில் அனுமதிக்க கூடாது. மருந்து தெளித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் உணவு அருந்துவதோ, குடிநீர் குடிக்கவோ கூடாது. மேலும் மருந்தை கலக்கும் போது எப்போதும் காற்று வீசும் திசையிலேயே நின்று கலக்க வேண்டும். காற்று வீசும் திசையை நோக்கி மருந்து தெளிப்பவர் நடந்து செல்ல வேண்டும்.

எந்த காரணத்தைக் கொண்டும் அடைப்பட்ட நாசில்களை வாயால் ஊதி சுத்தம் செய்யக் கூடாது. அதற்கு பதிலாக சிறிய குச்சிகளை பயன்படுத்தலாம். பயன்படுத்திய கருவிகள் மற்றும் உபகரணங்களை நன்றாகக் கழுவிப் பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

காலியான பூச்சி மருந்து புட்டி மற்றும் கலன்களை நீர்நிலைகளிலோ அல்லது வயலில் எறிவதை தவிர்க்க வேண்டும். அந்த காலி டப்பாக்களை வீட்டில் பயன்படுத்துவதையும் தவிர்க்க வேண்டும். வயலில் மருந்து தெளித்தவுடன் இந்த காலி டப்பாக்களை பூமியில் புதைத்து விடுவது நல்லது.

மருந்து தெளித்த பிறகு, கைகளைச் சோப்பு மற்றும் வெது வெதுப்பான நீரால் நன்றாகக் கழுவ வேண்டும் என தெரிவித் தனர். அறிவியல் நிலையம் விஞ்ஞானிகள் இயற்கை விவசாயத்தின் அனுபவங்களை மற்ற விவசாயிகளுடன் கலந்துரையாடினர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் லதா, உதவி மேலாளர் முனீஸ்வரி, நிவேதா, துணை வேளாண்மை அலுவலர் சுந்தரராஜ், உதவி வேளாண் அலுவலர் அழகர்ராஜ் ஆகியோர் இந்த பயிற்சி விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இந்த பயிற்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# லாபகரமான கால்நடை வளர்ப்பு பயிற்சி



இராணிப்பேட்டை, ஜூலை 12

இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி வட்டாரம் வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தின் மூலம் மகேந்திர வாடி கிராமத்தில் இலாபகர மான மாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி வேளாண்மை உதவி இயக்குனர் அருணாகுமாரி தலைமையில் நடைபெற்றது.

அவர் பேசுகையில் விவசாயிகள் அனைவரும் விவசாய அடையாள அட்டை எண் பதிவு செய்திருக்க வேண்டும் எனவும், உரத் தட்டுப்பாட்டை சமாளிக்க மண் பரிசோதனை செய்து தேவைக்கேற்ப உரங்களை இட்டு மண் வளத்தை காத்து பயன்பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

பயிற்சியில் கலந்து கொண்ட மகேந்திரவாடி கால்நடை மருத்துவர் டாக்டர் கௌரிசங்கர் கால்நடை பராமரிப்பு, மாடு களுக்கு பால் உற்பத்தியை பெருக்கவும், எடை அதிகரிக்கவும் தீவனமாக ஊறுகாய் புல் முறையை செய்து பயன்படுத்தலாம் மற்றும் அசோலா தீவனங்களை பயன்படுத்தலாம் என கூறினார். மேலும் கோமாரி நோய் தடுப்பூசிகள் குறித்த விழிப்புணர்வு, நாட்டுக்கோழி வளர்ப்பு, பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமாக எடுத்துரைத்தார். ஊராட்சி மன்ற தலைவர் பரணி குமார் முன்னிலை வகித்தார்.

உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார் வேளாண்மைத் துறை திட்டங்கள் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் குறித்து பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி, உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட கலவை பயன்பாடுகள் குறித்து பேசினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் செய்திருந்தார். பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# கொடுமுடிவட்டாரத்தில் புதிய சன்ன நெல் ரகங்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் பயிற்சி




ஈரோடு, ஜூன் 12

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம் வேளாண்மைத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் இச்சிப்பாளையம் வருவாய் கிராமத்தில் உழவர்களுக்கு புதிய சன்ன நெல் இரகங்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி கொடுமுடி வட்டார துணை வேளாண்மை அலுவலர் கந்தசாமி தலைமையில் நடைப்பெற்றது. மேலும் வேளாண் இடுபொருட்களின் மானிய விபரங்கள் பற்றியும், தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார். வேளாண் அறிவியல் நிலையம் மைராடா கோபியிலிருந்து வேளாண் விஞ்ஞானி ஜான்பிரபாகரன், நெற்பயிரில் புதிய இரகங்கள் மற்றும் சாகுபடி தொழில்நுட்பங்கள் மற்றும் இயற்கை வழி விவசாயம் பற்றியும் விரிவாக எடுத்துரைத் தார். மேலும் விளைநிலம் காப்போம் இயக்கத்தின் மூலம் சமச்சீரான உர பயன்பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல் குறித்து விளக்கம் அளித்தார். வேளாண் அலுவலர் தனஜெயந்தி, விதை சான்றளிப்பு மற்றும் அங்கக சான்றளிப்பு துறையின் செயல்பாடுகள் மற்றும் விதைப் பண்ணை அமைத்தல் குறித்து விளக்கம் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் அரவிந்த் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விரிவாக கூறினார். இப்பயிற்சிக் கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரேணுகா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மஞ்சுரேகா, சிதம்பரம் ஆகியோர் செய்திருந்தனர்.



# ரோவர் வேளாண்மை கல்லூரியில் உலக சுற்றுச்சூழல் தின விழா கொண்டாட்டம்

பெரம்பலூர், ஜூலை 12

பெரம்பலூர் தந்தை ரோவர் வேளாண்மை கல்லூரியில் 05.06.2026 வெள்ளிக்கிழமையன்று உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டு அதை முன்னிட்டு மரம் நடும் விழா நடைபெற்றது.





தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பெரம்பலூர் மாவட்ட உதவி பொறியாளர் எம். வாணி ஸ்ரீ சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுற்றுசூழல் பாதிப்புகள் மற்றும் சுற்றுசூழலின் முக்கியத்துவம் பற்றி உரை நிகழ்த்தினார்.

ரோவர் கல்விக் குழும மேலாண் தலைவர் முனைவர் வரத ராஜன் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ஜான் அசோக் வரதராஜன் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர் இறைவன் அருட்கனி அய்யநாதன், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரை ஆற்றினார். மண்ணியல் துறை உதவி பேராசிரியர் பரமேஸ்வரி அனைவரையும் வரவேற்று பேசினார். உதவி பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர், ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவி களால் கல்லூரி வளாகத்தை சுற்றி பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டு விழாவிற்கு பெருமை சேர்த்தனர். இறுதி ஆண்டு மாணவி ஜெய ஸ்ரீ நன்றியுரை ஆற்றினார்.

நிர்வாக அலுவலர் ஜெயசீலன் மற்றும் அலுவலக மேலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# அலங்காநல்லூர் வட்டாரத்தில் துல்லிய பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி




மதுரை, ஜுன் 12

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரத்தில் குட்டிமேய்க்கிபட்டி கிராமத்தில் துல்லிய பண்ணையம் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 11.06.26ம் தேதி அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் குட்டிமேய்க்கிபட்டி, கீழக்கரை, கோவிலூர், பெரிய இலந்தைகுளம் கிராமத்தில் இருந்து 40 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன், விளைநிலம் பாதுகாப்போம் இயக்கம், கேத் பச்சோ அபியான இயக்கத்தின் மூலம் இயற்கை விவசாயம் மற்றும் மண்வள பாதுகாப்பு விவசாயிகள் பயிற்சி மற்றும் விழிப் புணர்வு முகாமில் எடுத்துக் கூறியதாவது சமச்சீரான உரப்பயன் பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல், மண் ஆரோக்கியத்தை மேம்படுத்துதல், மண்வளம் மற்றும் சமச்சீரான உரப் பயன்பாட்டை மேற்கொள் வதன் மூலம் சாகுபடி செலவை குறைப்பது, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, பசுந்தாள் உரப்பயன்பாடுகள் குறித்தும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

நடமாடும் மண்பரிசோதனை நிலைய ஆய்வகத்தின் வேளாண் அலுவலர் ஜோஸ்பின் நிர்மலா மண் மாதிரி எடுத்தல், மண் பரிசோதனை, மண் பரிசோதனை முக்கியத்துவம், மண்வளம் மேம்பாடு, மண்வள பாதுகாப்பு, உயிர் உரங்களின் பயன்கள் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்களின் பயன்பாடுகள் அதனை தயாரிக்கும் முறை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். மேலும் விசாயிகளின் வயலில் இருந்து எடுத்து வரப்பட்ட மண்மாதிரியினை நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகம் மூலமாக விவசாயிகளுக்கு மண் ஆய்வு முறைகளான தழைச்

சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து, நுண்ணூட்டச்சத்து முறையினை செயல்விளக்கமாக செய்து காட்டி விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்பட்டது. அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை அலுவலர் மு.வசந்தகுமார் விவசாயிகளின் தனித்துவ அடையாள எண் பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், மத்திய மாநில அரசின் மூலமாக கிடைக்கும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார்.

ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் குணசேகரன் பேசுகையில், துல்லிய பண்ணையம் என்பது நவீன தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயிர்களுக்கு தேவையான நீர், உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் துல்லியமாக அளந்து வழங்கும் நவீன விவசாய மேலாண்மை முறையாகும் என்றும் இதன் மூலம் உரங்கள் மற்றும் தண்ணீர் வீணடிப்பு தடுக்கப்படுகிறது, சுற்றுச்சூழல் மாசுபடுவது குறைகிறது, குறைந்த செலவில் அதிக மகசூல் கிடைக்கிறது எனவும் விவசாயத்தில் புதிய மாற்றத்தை உருவாக்க துல்லிய பண்ணைய முறைகளில் விவசாயம் செய்வ அவசியம் என விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார்.

மேலும் இயற்கை விவசாயத்தில் பசுந்தாள் உரமிடுதல் பயன்பாடுகள், பஞ்சகாவ்யம், மீன் அமினோ அமில கரைசல், மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனக்கவர்ச்சி பொறி, வேப்பங் கொட்டை கரைசல் தெளிப்பு, விளக்கு பொறி, இயற்கை திரவ உயிர் உரங்களான திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா ரைசோபியம், ஆகியவற்றினை பயன்படுத்துமாறும் குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என தொழில் நுட்பக் கருத்துக்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் காதர் மொகைதீன், வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் மானியத்திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கும் தொழில்நுட்ப உரையாற்றிய அலுவலர்களுக்கும் அலங்காநல்லூர் வட்டார தொழில்நுட்ப மேலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சௌந்தராஜன் மற்றும் வசந்தி ஆகியோர் செய்திருந்தனர்.

# மக்காசோளத்தில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

மதுரை, ஜூன் 12

மதுரை மாவட்டம், சேடபட்டி வட்டாரத்தில் கேத்துவார்பட்டி கிராமத்தில் வேளாண்மைத் துறை – வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் (ATMA-2026-27) மக்காசோளத்தில் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை



குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி 11.06.26 அன்று நடத்தப்பட்டது.




இப்பயிற்சியில் வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அ.ராணி, கலந்து கொண்டு மத்திய மற்றும் மாநில திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார் மற்றும் உயர் விளைச்சல் இரகங்கள் பற்றியும் இயற்கை வேளாண்மை முறைகள் விளக்கம் அளித்தார்.

வேளாண்மை உதவி இயக்குநர் கா.மணிமேகலை, உயர் விலைச்சல் இரகம் தேர்வு மற்றும் விதை தேர்வு, விதை நேர்த்தி, விதைக்கும் முறை, நிலம் சிரமைப்பு பற்றி எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் பெருமாள், பேசுகையில் மண்பரிசோதனை செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மண் எடுக்கும் வழிமுறைகள் பற்றியும் எடுத்து கூறினார்.

கேத் பச்சோ அபியான் திட்டத்தின் கீழ் கா.காமேஸ், இயற்கை விவசாயி கூறுகையில் சமச்சீரான உரபயன்பாட்டை மேற் கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மற்றும் சிறுதாணியங்கள் பயன்பாடு மற்றும் உற்பத்தி குறித்தும் மதிப்புகூட்டி சந்தைப்படுத்துதல் குறித்தும் விளக்கமாகவும் எடுத்துக்கூறி விவசாயிகள் தொழில் முனைவோர்களாக மாறவேண்டும் என்று கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.கணேசராஜா கலந்து கொண்டு பஞ்சகாவ்யம், மீன் கரைசல், இஞ்சி பூண்டு கரைசல், மோர் கரைசல் மற்றும் திரவ அசோஸ்பைரில்லம், ரைசோபியம் ஆகிய இயற்கை உரங்களை பயன்படுத்தி பூச்சி, நோய் தாக்கு தலின்றி இயற்கை முறையில் அதிக மகசூல் பெற்றிடலாம். விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள அட்டை பதிவு செய்வது பற்றியும் எடுத்துக்கூறப்பட்டது. உதவி தொழில்நுட்ப மேலாளர் சத்யா பயிற்சி ஏற்பாடுகளை செய்து நன்றி கூறினார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பால் காளான் வளர்ப்பில் அசத்தும் பாலாறு வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள்



வேலூர், ஜூன் 12 அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, சத்தான மற்றும் அதே நேரத்தில் குறைந்த செலவில் அதிக லாபம் தரும் மாற்று உணவுப் பயிர்களின் தேவை விவசாயத்துறையில் இன்றியமை யாததாக மாறியுள்ளது. அந்த வகையில், இந்தியாவின் வெப்பமண்டல காலநிலைக்கு மிகவும் உகந்த, அதிக வணிக மதிப்புடைய பால் காளான் (Milky Mushroom - Calocybe indica) வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. இத்தொழில்நுட்பத்தை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் நோக்கில், பாலாறு வேளாண்மைக் கல்லூரியின் தாவர நோயியல் துறை சார்பாக 2022 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சிறப்புப் பயிற்சி முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

வழக்கமான சிப்பிக் காளான்கள் குளிர்ந்த காலநிலையை விரும்பும் நிலையில், பால் காளான்கள் 30°C முதல் 38°C வரையிலான அதிக வெப்பநிலையைத் தாங்கி வளரக்கூடியவை. இதனால் தமிழகத்தின் கோடைகாலத்திலும் இதை தடையின்றி உற்பத்தி செய்ய முடியும். மேலும், மற்ற காளான்களை விட இதன் தண்டுப்பகுதி தடிமனாகவும், தூய வெள்ளை நிறத்திலும் இருப்பதால், பறித்த பிறகும் 3 முதல் 5 நாட்கள் வரை சாதாரண வெப்பநிலையிலேயே கெடாமல் இருக்கும் தனித்துவமான சந்தை வாய்ப்பைக் கொண்டுள்ளது.

இப்பயிற்சியில் தாவர நோயியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கு.விக்னேஷ், பால் காளான் வளர்ப்பில் உள்ள வணிக வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு விரிவுரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற நேரடி செய்முறைப் பயிற்சியில் பின்வரும் முக்கியக் கட்டங்கள் விளக்கிக் காட்டப் பட்டன.

● **ஊடகத் தயாரிப்பு** : வைக்கோலை முறையாக அவித்து, ஈரப்பதம் 65% இருக்கும்படி உலர்த்தி பிளாஸ்டிக் பைகளில் அடுக்குகளாக நிரப்புதல்.

● **வித்து இடுதல் (Spawning)** : தரமான காளான் வித்துக்களை படுக்கைகளில் இட்டு 20-25 நாட்களில் பூஞ்சணக் காளான் (Mycelium) வலை போல் பரவுவதை உறுதி செய்தல்.

● **மேல்மண் இடுதல் (Casing Process)** : பால் காளான் உற்பத்தியின் மிக முக்கியமான பகுதியான, பூஞ்சணம் படர்ந்த படுக்கையின் மேல் ஒரு அங்குல உயரத்திற்கு கிருமி நீக்கம் செய்யப்பட்ட புற்று மண் அல்லது செம்மண்ணைப் பரப்புதல். இந்த மேல்மண் தான் காளான்கள் மொட்டு விடுவதற்கும், தேவையான ஈரப்பதத்தைத் தக்க வைப்பதற்கும் உதவுகிறது.

**விற்பனை வாய்ப்பு** : பால் காளானில் உள்ள அதிகப்படியான நார்ச்சத்து மற்றும் அசைவ இறைச்சி போன்ற சுவை காரணமாக, உணவகங்கள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகளில் இதன் தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இப்பயிற்சியின் நிறைவாக, மாணவர்கள் வெறும் நுகர்வோராக மட்டும் இல்லாமல், குறைந்த முதலீட்டில் தங்கள் கிராமப்புறங் களிலேயே காளான் குடில்களை அமைத்து, சுயதொழில் முனைவோராக மாற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. இதன் மூலம் ஊரகப் பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என கல்லூரி நிர்வாகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.




# மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு உத்திகள் தொழில்நுட்ப பயிற்சி



சேலம், ஜூன் 12

சேலம் மாவட்டம், சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு உத்திகள் குறித்த தொழில்நுட்ப பயிற்சி புதன்கிழமை (10.6.26) நடைபெற்றது. திருச்சி மாவட்டம், துவாக்குடியில் உள்ள பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் மூலம் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் ஆர் விஜயன், நுண்ணீர் பாசன தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்தார். இணை பேராசிரியர் எஸ்.இளங்கவி, மண் பரிசோதனை மற்றும் மண்வள பாதுகாப்பில் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து பயிற்சி அளித்தார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப உதவியாளர் ஜி.செந்தில்நாதன், வேளாண் உற்பத்தியை மேம்படுத்தும் மண் மற்றும் நீர்வள உத்திகள் குறித்து விவசாயிகளுக்கு களப்பார்வை மூலம் விளக்கமளித்தார். பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் இணைப் பேராசிரியர் பொறி எம்.வல்லரசன் வேளாண்மையில் மண் மற்றும் நீர் மேலாண்மையின் முக்கியத்துவம், மழை நீர் சேகரிப்பு தொழில் நுட்பம் குறித்து பயிற்சி அளித்தார்.

உதவி பேராசிரியர் பொறி.சி.கிறிஸ்டல்கோரெட், பண்ணை இயந்திரமயமாக்குதல் மற்றும் வேளாண் இயந்திரங்கள் அரசு மானியத்தில் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி அளித்தார். உதவி பேராசிரியர் அக்ரி. கே கவிதா, பாசன நீர் தரப் பரிசோதனை மற்றும் பயிர்களுக்கான நீர் தேவை குறித்து பயிற்சி அளித்தார். மேலும் இந்த பயிற்சியில் விவசாயிகளுக்கு ட்ரோன் மூலம் பூச்சி மருந்து தெளிக்கும் செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.

இப்பயிற்சிக்காக விவசாயிகளை ஒருங்கிணைத்து மற்றும் பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் அறிவியல் நிலையத்தின் வேளாண் காலநிலை கண்காணிப்பாளர் எஸ்.பிரபாகரன் சிறப்பாக செய்திருந்தார். இந்த பயிற்சியில் சேலம் மாவட்டத்தைச் சார்ந்த 45 விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.

# பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி பயிற்சி

சேலம், ஜூலை 12




சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி வட்டாரம், ஏகாபுரம் கிராமத்தில், பயறு வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளி பயிற்சி விவசாயி களுக்கு நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் மகுடஞ்சாவடி விதை சான்று அலுவலர் அருண் கலந்து கொண்டு பாசிப்பயிர் சாகுபடியில் பருவம் மற்றும் விதை தேர்வு, நிலம் தயார் செய்தல், விதை நேர்த்தி செய்தல் குறித்து பயிற்சி அளித்தார். மேலும் இப்பயிற்சியில் ஏற்காடு தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் உதவி பேராசிரியர் செந்தில் குமார், கலந்து கொண்டு பயறு வகை பயிர்களில் களை மேலாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்து பயிற்சி அளித்தார்.

இப்பயிற்சியில் மண் பரிசோதனைக்கு மண் மாதிரி எடுத்தல் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில் மகுடஞ்சாவடி உதவி விதை அலுவலர் செல்வம், அட்மா திட்ட அலுவலர் விஜயகுமார், மகேந்திரன், பாலச்சந்திரன் மற்றும் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# கறவை மாடுகளுக்கான பாரம்பரிய பராமரிப்பு மற்றும் மருத்துவ முறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி



சேலம், ஜூலை 12

சேலம் வட்டாரம், சேலத்தாம்பட்டியில் கறவை மாடுகளுக்கான பாரம்பரிய பராமரிப்பு மற்றும் மருத்துவ முறைகள் குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் காமினாய்க்கன்பட்டி கால்நடை மருத்துவர் இந்துமதி, கறவை மாடுகளின் ஆரோக்கிய பராமரிப்பு பாரம்பரிய மருத்துவ முறைகள் தீவன மேலாண்மை நோய் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் இயற்கை மூலிகைகளின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

மேலும், பால் உற்பத்தியை அதிகரிக்கும் பாரம்பரிய நடைமுறைகள் மற்றும் மாடுகளின் நலன் சார்ந்த மேலாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கத்துடன் பயிற்சி வழங்கப்பட்டது.

சேலம் வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, இயற்கை வேளாண்மை உழவர் அடையாள எண் பிஎம் கிசான் திட்டம் பற்றியும் விவசாயிகளுடன் கலந்துரையாடினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கந்தசாமி, விளைநிலம் காப்போம் இயக்கம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இதில் விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது சந்தேகங்களுக்கு விளக்கங்களை பெற்றனர். இப்பயிற்சி கறவை மாடுகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, பால் உற்பத்தியை உயர்த்த உதவும் என பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

பயிற்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உதவி தொழில் நுட்ப மேலாளர் ல்லி ராஜ்குமார் செய்திருந்தார்.